**செய்தி வெளியீடு எண்:1323** **நாள்:11.12.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

சென்னை, தலைமைச் செயலகத்தில் இன்று (11.12.2021) எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரிந்து பணிக்காலத்திலேயே இயற்கை எய்திய நான்கு அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் பணிபுரிந்து பணிக்காலத்திலேயே இயற்கை எய்திய அரசு ஊழியர்களின் கீழ்காணும் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால் சென்னை, தலைமைச் செயலகத்தில் இன்று (11.12.2021) வழங்கப்பட்டது.

| **வ. எண்.** | காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் பெயர் (ம) பதவி | பணிநியமனம் வழங்கப்படும் வாரிசுதாரர்களின் பெயர் | **கருணை அடிப்படையில் வழங்கப்படும் பதவி** |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.மோகன் (முதுநிலை தட்டச்சு கம்மியர்) | திரு.எம்.கோபி | இளநிலை உதவியாளர் |
| 2. | திரு.ஆர்.சிவலிங்கம் (காலங்குறிப்பவர்) | திரு.எஸ்.சுரேஷ்குமார் | அலுவலக உதவியாளர் |
| 3. | திரு.ஆர்.சுப்பிரமணி (மஸ்தூர்) | திருமதி.எஸ்.சித்ரா | அலுவலக உதவியாளர் |
| 4. | திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் (மஸ்தூர்) | திருமதி.பி.புவனேஸ்வரி | அலுவலக உதவியாளர் |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**